1979 ஏப்ரல் 21]

உற்பத்தி ஆகின்ற கரும்பில் சுகர் ரெக்கவரித் தன்மை குறைவாக இருக்கிறது என்ற கணக்கினைச் சொல்கிறார்கள். அந்தச் கணக்கின் காரணமாகத்தான் அந்த விலை கொடுக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. மருதாசலம்: தலைவரவர்களே, இந்த சக்தி சுகர் ஆலையைப் போல் கோவை மாவட்டத்தில் அமராவதி சர்க்கரை ஆலை நஷ்டத்தில் நடந்து வருவது அரசுக்குத் தெரியுமா? அப்படி என்றால் அதைச் சீர்திருத்த நமது அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மருதமலையில் தங்கும் விடுதிகள்.

* வினா எண் 755—திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர்— கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவையில் உள்ள மருதமலையில் சுற்றுலாத்துறை மூலம் தங்கும் விடுதிகள் கட்டும் திட்டம் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: இல்லை.

திரு. என். பழனிவேல்: பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் இல்லை என்று பதில் சொல்லி விட்டார்கள். அதேபோல் நம் மாநிலத்திலுள்ள எந்தெந்த மலைக்கோயில்களில் சுற்றுலா மையங்கள் ஏற்படுத்தக்கூடிய திட்டங்கள் அரசின் பரிசீலனையில் தற்போது இருக்கின்றது என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

* மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: பேரவைத் தலைவரவர்களே, சுற்றுலா மையங்கள் என்பது வேறு, சுற்றுலா விடுதிகள் என்பது வேறு. சுற்றுலா விடுதிகள் அமைப்பதற்கு மலைக் கோயில்கள் என்பது ஒன்றும் அடிப்படை இலக்கணம் அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. மருதாசலம்: பேரவைத் தலைவரவர்களே, கோவை மாவட்டத்திலுள்ள மருதமலை என்பது பிரசித்தி பெற்ற திருக்கோயில் என்பது அமைச்சரவர்களுக்குத் தெரியும். அப்படி இருக்கின்ற அந்தப் பகுதிக்கு ஏராளமான பயணிகள் தமிழகம் முழுவதும் இருந்து வந்து கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட இடத்தில் சுற்றுலா வாரியத்தின் சார்பிலே ஒரு விடுதி கட்டி விடலாம். அப்படி இல்லை என்றால் அந்தக் கோயில் வருமானத்தைக் கொண்டு ஒரு சுற்றுலா விடுதி கட்டுவதற்கு அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன். அத்தோடு அந்தக் கோயிலுக்குப் பக்கத்தில் இன்னொரு சாமியார் இருந்துகொண்டு அந்தக் கோயிலைப்பற்றி துவேஷப் பிரச்சாரங்கள் செய்து

வருகிறார் என்பது அமைச்சருக்கும் தெரியும். ஆகவே அவர்மீது நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-10)

மாண்புமிகு திரு. ஆர் எம் வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, மருதமலை என்பது கோவைக்கு அருகாமையில் இருக்கிறது. கோவை நகரத்தில் சுற்றுலா வளர்ச்சி கழகம் அதிக அறைகள் அடங்கிய விடுதிகளைக்கட்டுவதற்குரிய நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறது. சுற்றுலா விடுதிகள் அமைப்பதன் அடிப்படை நோக்கமே அங்கே வருகிற சுற்றுலாப் பயணிகள் தங்குகிற முறையையும், அளவையும், மற்ற பிரச்னைகளையும் மனதில் கொண்டு இப்படிப்பட்ட விடுதிகள் கட்டுகின்ற திட்டம் நிறைவேற்றப்படுகிறது. மருதமலை என்பது யாத்ரீகர்கள் வருகின்ற ஸ்தலமாக இருக்கிறது. அங்கே பக்தர்கள் தங்குகிற அமைப்புகளைக் கட்டுவதில் சுற்றுலா வளர்ச்சி கழகம் ஈடுபட முடியாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த யோசனை மீது அறநிலைய துறையின் சார்பில் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அது ஆய்வில் இருக்கிறது. இன்னொன்றையும் தெரிவித்தார்கள். அந்தக் கோவிலுக்குப் பக்கத்தில் யாரோ ஒரு சாமியார் துஷ்பிரயோகம் செய்வது அமைச்சர் அவர்களுக்குத் தெரியும் என்று சொன்னார்கள். அமைச்சருக்குத் தெரிந்து நடக்கவில்லை. ஆனால் மருதமலைக்குப் பக்கத்தில் வனத்துறைக்குச் சொந்தமான ஒரு இடத்தை ஆக்கிரமித்துக்கொண்டு அங்கே ஒருவர் தனியாக பிரச்சாரம் செய்து கொண்டிருக்கிறார் என்பது அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதுமாத்திரமல்ல, சமூக விரோத சக்திகள் அதைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்ற தகவலும் வந்திருக்கிறது. அது தீவிர பரிசிலனைக்குரியதாக இருக்கிறது. அதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும்.

கிளைச் சிறைகள் நிர்வாகம்.

* வினா எண் 756—திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் எத்தனை கிளைச் சிறைச்சாலைகள் உள்ளன ?

(ஆ) கிளைச் சிறைச்சாலைகளின் பராமரிப்பினை சிறைத் துறைக்கு மாற்ற அரசு தீர்மானித்துள்ளதா ?